**IN THE COURT OF THE SUB JUDGE, MELUR**
**DEPOSITION OF WITNESS**
**IA 1/2022 in OS 182/2021**

**Name : Rathika**
**Father's Name :**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 19.12.2022**

**ம.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர் மற்றும் வழக்கில் 3ம் தரப்பினர். என்னை வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இதற்கு ஆதாரமாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன். மனுதாரரின் தாயார் மற்றும் தாயாருடன் உடன் பிறந்தவர்கள் பெயரில் உள்ள பட்டா எண்.2951ற்கான 11.04.2022ம் தேதிய கணிணி நகல் ம.சா.ஆ.1. மனுதாரரின் தாயாரை பெற்ற ராசு பெயரில் உள்ள பட்டா எண்.2432ற்கான 11.04.2022ம் தேதிய கணிணி நகல் ம.சா.ஆ.2. மனுதாரரின் தாயாருடன் பிறந்த மணி பெயரில் உள்ள பட்டா எண்.4343ற்கான 11.04.2022ம் தேதிய கணிணி நகல் ம.சா.ஆ.3. 10.12.1985ம் தேதிய பாண்டியம்மாளின் இறப்பு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பிட்டு ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.12.2022ம் தேதிய பாண்டியம்மாளின் வாரிசு சான்றிதழ் கணிண நகல் ம.சா.ஆ.5. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது வாக்காளர் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரரின் குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.